**மே – 04**

# தமிழ்நாடு செய்திகள்

## சாலை பாதுகாப்பு வாரம்

- 29-வது சாலை பாதுகாப்பு வாரத்தின் (Road Safety Week) அனுசரிப்பு தமிழகம் முழுவதும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியோடு இணைந்து ஏப்ரல் 23-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை நடைபெற்றுள்ளது.
- 2018-ஆம் ஆண்டிற்கான சாலை பாதுகாப்பு வாரத்தின் கருப்பொருள் "சதக் சுரக்ஷா – ஜீவன் ரக்ஷா" (Sadak Suraksha — Jeevan Raksha') என்பதாகும். தமிழில் இதன் அர்த்தம் சாலை பாதுகாப்பு , உயிர் பாதுகாப்பு என்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## காந்தியின் 150வது பிறந்தநாள் – தேசிய குழு

- 2019-ஆம் ஆண்டு கொண்டாடப்பட உள்ள மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த நாள் ஆண்டை நினைவுகூர்வதற்கான தேசிய குழுவின் (National committee for commemoration of the 150th birth anniversary of Mahatma Gandhi) முதல் சந்திப்பு அண்மையில் புது தில்லியில் நடைபெற்றது.
- மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த நாள் ஆண்டை நினைவுகூர்வதற்கான தேசிய குழுவின் இந்த முதல் சந்திப்பிற்கு இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமை தாங்கி உள்ளார்.
- இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இந்த கமிட்டியின் தலைவராவார். துணை குடியரசுத் தலைவர் M.வெங்கையா நாயுடு, முன்னாள் பிரதமர்கள், மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள், மக்களவை சபாநாயகர், மத்திய கேபினேட் உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், மாநில முதலமைச்சர்கள், காந்தியவாதிகள் (Gandhians) மற்றும் ஆன்மீக குருக்கள் (spiritual gurus) மற்றும் பல்வேறு சமூகப் பணியாளர்கள் (social workers) உட்பட 114 உறுப்பினர்களை இக்குழு உள்ளடக்கியுள்ளது.
- தேசத் தந்தையான மகாத்மா காந்தியின் 150-வது பிறந்தநாள் 2019-ஆம் ஆண்டின் அக்டோபர் 2-ஆம் தேதி முதல் 2020-ஆம் ஆண்டின் அக்டோபர் 2 ஆம் தேதி வரை கொண்டாடப்பட உள்ளது.

## மேற்கு மண்டல குழுவின் 23-வது சந்திப்பு

- மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்-கின் தலைமையின் கீழ் குஜராத் மாநிலத்தின் காந்தி நகரில் மேற்கு மண்டல குழுவின் (Western Zonal Council) 23-வது சந்திப்பு நடைபெற்றுள்ளது.
- மண்டல குழுக்களானது 1956-ஆம் ஆண்டின் மாநிலங்கள் மறுச் சீரமைப்புச் சட்டத்தின் படி (States Reorganization Act, 1956) உருவாக்கப்பட்ட சட்ட அமைப்பாகும் (statutory body). இது ஓர் அரசியலமைப்பு அமைப்பல்ல.
- மாநிலங்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும், மத்திய அரசு மற்றும் மாநில

அரசுகளிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் மண்டல குழுக்கள் உருவாக்கப்பட்டன.

- தற்சமயம், நடப்பில் மொத்தம் 5 மண்டல மண்டல குழுக்கள் உள்ளன.
- அவையாவன
    - வடக்கு மண்டல குழு
    - மேற்கு மண்டல குழு
    - மத்திய மண்டல குழு
    - தெற்கு மண்டல குழு
    - கிழக்கு மண்டல குழு
- மண்டல குழுக்கள் அரசியற்சட்ட அமைப்புகள் (constitutional bodies) அல்ல. இவை மத்திய உள்துறை அமைச்சரை (Union Home minister) தலைவராகக் கொண்ட விளக்கப் பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனை நல்கு (only deliberative and advisory bodies) அமைப்பு மட்டுமே ஆகும்.
- வடகிழக்கு மாநிலங்கள் இந்த ஐந்து மண்டல குழுக்களில் உள்ளடக்கப்படவில்லை.
- 1972 – ஆம் ஆண்டின் வடகிழக்கு கவுன்சில் சட்டத்தின் (North Eastern Council Act, 1972) கீழ் உருவாக்கப்பட்ட வடகிழக்கு கவுன்சிலினால் (North Eastern Council) வடகிழக்கு மாநிலங்களின் குறிப்பிட்ட பிரச்சனைகள் களையப்படுகின்றன.


## விஜய் பிரஹார் போர் பயிற்சி

- இந்திய இராணுவத்தின் தென்மேற்கு படைப் பிரிவானது (South Western Command of the Indian Army) இராணுவத்தின் இணைந்து செயல்படும் தன்மையினை (Army's jointmanship) மேம்படுத்துவதற்காக இந்திய விமானப் படையுடன் இணைந்து விஜய் பிரஹார் (Vijay Prahar) எனும் போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.
- விஜய் பிரஹார் போர் பயிற்சியானது ராஜஸ்தான் மாநிலத்தின் சூரத்கருக்கு (Suratgarh) அருகிலுள்ள மஹாஜன் (Mahajan) பகுதியில் நடைபெற்றுள்ளது.
- இரு வாரங்களுக்கு முன் துவங்கிய இப்போர் பயிற்சியானது மே 9-ஆம் தேதி முடிவடையும்.
- இராஜஸ்தானின் மேற்கு பிரிவில் தன்னுடைய வலிமையினை சோதனை செய்ய இந்திய விமானப் படை நடத்திய "ககன் சக்தி" (Gagan Shakti) போர் பயிற்சியினால் உண்டான விழிப்பினைத் தொடர்ந்து விஜய் பிரஹார் போர் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவத்தின் தென்மேற்கு படைப் பிரிவானது 2005 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- இது 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி அன்று முழு செயல்பாட்டிற்கு வந்தது.
- இதன் தலைமையகம் இராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூரில் அமைந்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலக பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடு 2018

- எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் (Reporters Without Borders) அமைப்பால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள 2018-ஆம் ஆண்டிற்கான உலக பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீட்டில் (World Press Freedom Index -WPFI) 2017 ஆம் ஆண்டின் பத்திரிக்கைச் சுதந்திரத்தினுடைய நிலையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உலகம் தழுவிய கணக்கெடுப்பில் 180 நாடுகளுள் இந்தியா 138-வது இடத்தைப் பிடித்துள்ளது.




- 2017-ஆம் ஆண்டிற்கான பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீட்டில் 136 வது இடத்தைப் பிடித்திருந்த இந்தியா இந்த ஆண்டு இரண்டு இடம் பின்தங்கி 138-வது இடத்தை பிடித்துள்ளது.
- 2018-ஆம் ஆண்டிற்கான பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீட்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக நார்வே முதலிடம் வகிக்கின்றது. சுவீடன் இரண்டாவது இடத்திலும், நெதர்லாந்து மூன்றாவது இடத்திலும், பின்லாந்து நான்காவது இடத்திலும், சுவிட்சர்லாந்து ஐந்தாவது இடத்திலும் உள்ளது.
- பத்திரிக்கை சுதந்திரத்தின் மீது மிகவும் அடக்கு முறை கொண்ட (most repressive country) நாடாக வட கொரியா தொடர்ந்து நீடிக்கின்றது. வடகொரியாவைத் தொடர்ந்து எரித்திரியா (Eritrea), துர்க்மெனிஸ்தான், சிரியா மற்றும் சீனா ஆகியவை உள்ளன.
- இந்தக் குறியீட்டில் சீனாவினுடைய தரவரிசையில் எந்த மாற்றமும் நிகழாமல் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 175-வது இடத்தில் உள்ளது.
- 2002-ஆம் ஆண்டிலிருந்து எல்லைகள் அற்ற பத்திரிக்கையாளர்கள் அமைப்பினால் ஆண்டுதோறும் உலக பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடு வெளியிடப்படுகின்றது.
- உலக பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடானது உலகின் 180 நாடுகளில் ஊடகங்களினுடைய சுதந்திரத்தின் அளவினை (level of media freedom) அளவிடுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## இராஜஸ்தானின் 5வது அட்டவனை பகுதிகள்

- மத்திய கேபினேட் அவையானது (Union Cabinet) இராஜஸ்தான் மாநிலத்தின் சில பகுதிகளை அரசியலமைப்புச் சட்டத்தின் அட்டவணை ஐந்தின் (Fifth Schedule to Constitution) கீழ் சேர்ப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- அட்டவணை ஐந்தினுடைய சட்டக்கூறுகளின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பயன்களை (protective measures) இராஜஸ்தான் மாநிலத்தில் வாழும் பழங்குடியினர் பெறுவதற்காக அவர்கள் வாழும் இடங்கள் அட்டவணை 5-ன் கீழ் சேர்க்கப்பட உள்ளது.
- இராஜஸ்தான் மாநிலத்தின் பன்ஸ்வாரா (Banswara), துங்கார்பூர் (Dungarpur), பிராதாப்கர் (Pratapgarh) ஆகிய மூன்று மாவட்டங்கள் முழுமையும், 9 தாலுக்காகளும் ஒரு மண்டலமும் (one block), ராஜஸ்தானின் சிரோஹி (Sirohi), பாலி(Pali), சித்தோர்கர் (Chittorgarh), உதய்பூர் (Udaipur), ராஜ்சாமண்ட் (Rajsamand), ஆகிய மாவட்டங்களில் 227 கிராமங்களை உள்ளடக்கும் 46 முழு கிராம பஞ்சாயத்துக்களும் அரசியலமைப்புச் சட்டத்தின் அட்டவணை ஐந்தின் கீழ் சேர்க்கப்பட உள்ள இராஜஸ்தான் மாநிலப் பகுதிகளாகும்.
- இந்த புதிய அரசியலமைப்பு உத்தரவின் பிரகடனமானது ராஜஸ்தான் மாநிலத்தின் அட்டவணை பழங்குடியினர் (scheduled tribes -ST) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அட்டவணை ஐந்தின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பயன்களினைப் பெறுவதினை உறுதி செய்யும்.

## இந்தியாவின் நீண்டகால முதலமைச்சர்

- இந்திய மாநிலம் ஒன்றில் நீண்ட காலம் ஆட்சி புரிந்த முதலமைச்சராக (longest-serving chief minister) சிக்கிம் மாநில முதலமைச்சர் பவன் சம்லிங் (Pawan Chamling) உருவாகியுள்ளார். அண்மையில் பவன் சம்லிங் எவ்வித இடைத்தடைக் காலமும் இல்லாத 25-வது வருடத்தை முதலமைச்சராக நிறைவு செய்துள்ளார். இதன் மூலம் இவர் 23 ஆண்டுகள் தொடர்ந்து முதலமைச்சராக இருந்த மேற்கு வங்க மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரான திரு ஜோதி பாசு அவர்களின் சாதனையை முறியடித்துள்ளார்.
- 1993-ஆம் ஆண்டு திரு. பவன் சம்லிங் சிக்கிம் ஜனநாயக முன்னணி கட்சியை (Sikkim Democratic Front Party) தொடங்கினார்.
- சிக்கிம் ஜனநாயக முன்னணி கட்சியின் நிறுவனரான இவர் 1994-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலமைச்சர் ஆனார்.
- சிக்கிம் மாநிலத்தை மாற்றுவதற்காக "புது சிக்கிம் மகிழ்ச்சியான சிக்கிம்" (New Sikkim, Happy Sikkim) என்ற முழக்கத்தோடு பவன் சம்லிங் பல்வேறு அரசுக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை துவங்கியுள்ளார்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் - புதிய தலைவர்

- 1981-ஆம் ஆண்டின் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி மற்றும் முன்னாள் கர்நாடக தலைமைச் செயலாளரான சுபாஷ் சந்திர குந்தியா (Subhash Chandra Khuntia) இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் (Insurance Regulatory and Development Authority of India-IRDAI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நியமனங்களுக்கான கேபினேட் குழுவானது (Appointments Committee of the Cabinet -ACC) இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் தலைவராக, 3 ஆண்டுகள் பதவிக் காலத்திற்கு சுபாஷ் சந்திர குந்தியாவின் நியமனத்திற்கு அனுமதி வழங்கி உள்ளது.
- IRDAI-அமைப்பின் தலைவராக இருந்த T.S விஜயன் அவர்களின் பதவிக்காலம் 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி 21 ஆம் தேதி முடிவடைந்ததால் இப்பதவியானது இரு மாதங்களுக்கும் மேலாக நிரப்பப்படாமல் இருந்து வந்தது.
- இந்தியாவில் காப்பீட்டு தொழில்துறையை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற மற்றும் மேம்படுத்துகின்ற ஓர் உச்ச சட்ட அமைப்பே (apex statutory body) இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் ஆகும்.
- 1999-ஆம் ஆண்டின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டத்தின் (Insurance Regulatory and Development Authority Act, 1999) கூறுகளின் படி இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் ஹைதராபாத்தில் அமைந்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## காமன்வெல்த் பதக்கப்பட்டியல் - தமிழ்நாடு

- ஆஸ்திரேலியா நாட்டின் கோல்டு கோஸ்ட் நகரில் (Gold Coast) ஏப்ரல் 4 ஆம் தேதி முதல் to 15 தேதி வரை நடைபெற்ற 21-வது காமன்வெல்த் போட்டியில் பதக்கங்கள் வென்றுள்ள தமிழக விளையாட்டு வீரர்களுக்கு தமிழக அரசு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது. மேலும் ஒவ்வொரு வீரருக்கும் ரூ.50 லட்சம் உயர் ரொக்க ஊக்கத் தொகையை (High cash incentives) அறிவித்துள்ளது.
- இந்த 21 வது-காமன்வெல்த் போட்டியில் 26 தங்கம், 20 வெள்ளி மற்றும் 20 வெண்கலம் என மொத்தம் 66 பதக்கங்களை வென்று இந்தியா பதக்கப் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

### *பதக்கம் வென்றுள்ள தமிழக வீரர்கள்*

- சத்யன் டேபுள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் மற்றும் ஆண்களுக்கான டேபுள் டென்னிஸ் இரட்டையர் போட்டியில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். இதனோடு சேர்ந்து காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இவர் மூன்று பதக்கங்களை வென்றுள்ளார்.

- சரத் கமல் ஆண்களுக்கான இரட்டையர் டேபுள் டென்னிஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினையும், டேபுள் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் போட்டியில் வெண்கலப் பதக்கத்தினையும் வென்றுள்ளார். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் சரத் கமல் வென்றுள்ள மூன்றாவது பதக்கம் இதுவாகும். பெண்களுக்கான இரட்டையர் ஸ்குவாஷ் போட்டியிலும், ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் போட்டியிலும் தீபிகா பல்லிகல் கார்த்திக் இரு வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் போட்டியில் சவுரப் கோஷல் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.
- பெண்களுக்கான ஸ்குவாஷ் இரட்டையர் போட்டியில் ஜோஷ்னா சின்னப்பா வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.
- ஆண்களுக்கான பளுதூக்குதல் போட்டியில் 77 கிலோ எடைப்பிரிவில் சதிஸ் சிவலிங்கம் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

- - - - - - - - - - - - - - -